ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/31 - 2024 පෙබරවාරි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.01

*2369/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012* (VI)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் பிரிவு 61(1) (குஆ) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2024, சனவரி 29.*

**ஒழுங்குவிதிகள்**

*2019, யூன் 3 ஆந் திகதிய 2126/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் படகோட்டிகளுக்கான தகுதிச் சான்றிதழ்களை வழங்குதல் (உள்நாட்டு மீன்பிடிப் படகுகள்) ஒழுங்குவிதிகள், அதன் 10 ஆம் ஒழுங்குவிதியில் அவ்வொழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :*

"10அ. எவரேனுமாளுக்கு 10 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட படகோட்டி உரிமமொன்று, அத்தகைய ஆள் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறும் வகையில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளாரெனக் கண்டறியப்பட்டால், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

10ஆ. எந்த படகோட்டியொருவரின் உரிமமானது ஒழுங்குவிதி 10அ இன்கீழ் இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்தப் படகோட்டியொருவர், ஒழுங்குவிதி 10அ இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உள்நாட்டு மீன்பிடிப் படகுகளில் படகோட்டியொருவராக அல்லது பணிக்குழு உறுப்பினரொருவராகச் சேவையாற்றுதலாகாது.".

EOG 02 - 0009

1A - PG 6635 — 1756 (2024/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*